9th November 1966]

(*b*) if so, the reasons therefor?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இராணுவத்தில் சேர்ந்துள்ள தமிழ்நாடு மருத்துவப் பணி மருத்துவ அதிகாரிகளுக்குக் குடும்பப் படி வழங்க அரசாங்கம் மருத்துவத்துறை நெறியாளருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. இதற்குத் தேவையான ஒப்பளிப்பு வழங்குவதற்கு நியமனப் படிவங்கள் முதலியவற்றை அனுப்பிவைக்குமாறு இராணுவத்தில் பணி புரிந்து வரும் சம்பந்தப்பட்ட மருத்துவர்களை போர் முனை இராணுவ-மருத்துவப் பணித் துறைத் தலைவர் மூலமாகத் தமிழ்நாடு மருத்துவத் துறை நெறியாளர் கேட்டுள்ளார். சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளிடமிருந்து நியமனப் படிவங்கள் முதலியன கிடைத்தவுடன் இப் படியை வழங்குவதற்கு நெறியாளர் தேவையான ஏற்பாடுகளைச் செய்வார்.

Adulteration of oil

* 570 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Ministre for Public Health be pleased to state—

(*a*) whether the Government have received any report of cases of adulteration of groundnut oil using rubber nuts; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. கணேசன் : ரப்பர் கொட்டைகளை பயன்படுத்தி கடலை எண்ணெயில் கலப்படம் செய்யப்படுவதாக பரவலாக எங்கும் சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது இப்படிப்பட்ட முறையீடு அரசாங்கத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள். இப்படி பரவலாக சொல்லப்படுகிற நிலைமையையாவது விசாரித்து ரப்பர் கொட்டைகளைக் கலப்பதால் குடலுக்கும், வயிற்றுக்கும் பெரும் தீமையை விளைவிக்கக்கூடும் என்பதை உணர்ந்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முன்வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரசாங்கத்திற்கு வந்த தகவலிலிருந்து சாம்பிள்களை எடுத்து அனலைஸ் செய்து பார்த்ததில் கடலை எண்ணெய்யோடு எள் எண்ணெய் கலந்திருப்பதாகத் தெரிந்தது. எள்ளோடு கடலை கலந்ததோ அல்லது கடலையோடு எள் கலந்ததோ எப்படியோ இரண்டும் கலந்ததான அனலிட்டிக்கல் ரிப்போர்ட்தான் வந்திருக்கிறது. ரப்பர் கொட்டை பற்றி வரவில்லை. அது பற்றி டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த் மறுபடியும் இன்னும் கொஞ்சம் சாம்பிள்களை அனலைஸ் செய்து அதில் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கும்போது தகவல் சொல்லலாம்.